**செய்தி வெளியீடு: 77** **நாள்:15.08.2020**

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் 74வது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆளுநர் மாளிகையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்

74வது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் இன்று (15.08.2020) காலை 10 மணியளவில் ஆளுநர் மாளிகையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

முன்னதாக, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் வருகைபுரியும் போது மத்திய ரிசர்வ் போலீஸ் படை, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றும் போது, இன்றைய இந்தியா, நாடுகளிடையே பரஸ்பர நல்லிணக்கத்தை உருவாக்குவதில் பெருமையுடன் முன்னணியில் அணிவகுத்து நிற்கிறது என்றும் நம் தேசமானது சுயசார்புடையது, அதே வேளையில், அதன் அரசியல் தலைமை, பொருளாதார வளர்ச்சி, ஆழ்ந்த கலாச்சார வேர்கள் மற்றும் சமூக ஒத்திசைவுக்காக உலகம் முழுவதிலும் நன்கு மதிக்கப்படுகிறது என்றும் கூறினார்.

இத்தருணத்தில், பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு அரும்பாடுபட்டு, தியாகம் செய்திட்ட வீரம் நிறைந்த நம் நாட்டின் ஆத்துமாக்கள் அனைவருக்கும் தனது அஞ்சலியை காணிக்கையாக்குவதாகவும் நமது நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னேறச் செய்திட்ட அனைவருக்கும் தனது நன்றியை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

மேலும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள், நமது மாண்புமிகு குடியரசுத் தலைவர், திரு. ராம் நாத் கோவிந்த் அவர்கள் மற்றும் நமது மாண்புமிகு பாரத பிரதமர், திரு. நரேந்திர மோடி அவர்கள் ஆற்றிய சுதந்திர உரையை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், தமிழக மக்கள் அனைவரும் கொரோனா நோய் தடுப்பிலிருந்து தங்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். அனைவரும் நல் ஆரோக்கியம் மற்றும்

பிரகாசமான எதிர்காலத்தைப் பெற்றிட தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மத்திய ரிசர்வ் போலீஸ் படை, காவல் துறை, தீயணைப்புத் துறை வீரர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வாழ்த்துக்கான அடையாளமாக இனிப்புகளை வழங்கினார்.

இந்நகழ்ச்சியில், ஆளுநரின் செயலாளர் திரு. ஆனந்தராவ் வி. பாட்டீல், இ.ஆ.ப., ஆளுநர் மாளிகை மூத்த அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை – 22 ஒம்/-

நாள்:15.08.2020 கூடுதல் இயக்குநர் (ம.தொ)

**<u>Press Release No.77</u>** **<u>Date:15.08.2020</u>**

**Hon’ble Governor of Tamil Nadu, Thiru. Banwarilal Purohit hoisted the National Flag at Raj Bhavan on the occasion of 74th Independence Day**

On the occasion of 74th Independence Day, Hon’ble Governor of Tamil Nadu, Thiru. Banwarilal Purohit hoisted the National Flag at Raj Bhavan today (15.08.2020) at 10 a.m.

On arrival Hon'ble Governor took the Salute from Ceremonial Guard of Honour and unfurled the National Flag in the premises of Raj Bhavan. Hon'ble Governor addressed the gathering of Raj Bhavan Staff, Central Reserve Police Force, Tamil Nadu Police and Tamil Nadu Fire and Rescue Services.

Hon’ble Governor said that India of today is on a proud forward march in the comity of nations. The nation is self-reliant and is respected all over the world for its political leadership, economic growth, deep cultural roots and social cohesion.

He called upon all citizens to pay tributes to all those brave souls who suffered and sacrificed for the noble cause of country’s freedom from British rule and express our gratitude to all those who enabled our country to move forward on the path of progress.

Hon’ble Governor emphasized that we have to follow the advice given by our Hon’ble President of India Thiru.Ram Nath Kovind and Hon’ble Prime Minister of India, Thiru. Narendra Modi in the Independence Day address.

Hon’ble Governor advised to people of Tamil Nadu to take all possible precautions and stay safe. He wished all of them best of health and bright future.

As a token of felicitation, Hon'ble Governor presented sweets to the Ceremonial Guard and other staff members.

On this occasion, Thiru. Anandrao Patil, I.A.S., Secretary to Governor, all senior officials and other staff of Raj Bhavan were present.

---

Raj Bhavan, Chennai -22 Sd/-

Date:15.08.2020 Addl. Director (PR)